## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 101/2022

PW1 – திரு. சாகுல் ஹமீது நாள். 29.01.2024

(1969ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**10ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 8, 9 பிரதிவாதிகளின் தகப்பனார் சேது என்ற சேதுராமனை நான் பார்த்துள்ளேனா என்றால் 2000 காலகட்டத்தில் கடைசியாக பார்த்துள்ளேன். எங்கு வைத்து அவரை பார்த்தேன் என்றால் அஞ்சுகோட்டை கிராமத்தில் வைத்து அவரை பார்த்தேன். 8, 9 பிரதிவாதிகளை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 2000 காலகட்டத்தில் கடைசியாக பார்த்தேன், அதற்கு பின்பு அவர்களை பார்த்ததில்லை, பேசியதும் இல்லை. மேற்படி சேது என்ற சேதுராமன் எனக்கு உறவினரா என்றால் உறவினர் இல்லை. எனது நிரூபண வாக்குமூலம் மற்றும் பிராதில் தாவா சொத்து எனக்கும், 1, 5, 6, 7 பிரதிவாதிகளின் தந்தையும், 2, 3, 4 பிரதிவாதிகளின் தாத்தாவுமான முகம்மது ராவுத்தர் என்ற மம்மது மற்றும் 8, 9 பிரதிவாதிகளின் தந்தை சேது என்ற சேதுராமன் ஆகியோர்களுக்கு கூட்டுப்பாத்தியமான சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் முகம்மது ராவுத்தர் என்ற மம்மதுவுக்கு தாவா சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டது என்றால் மேற்படி சேது என்ற சேதுராமனும், எனது தகப்பனாரும் கூட்டாக கிரையம் வாங்கப்பட்ட சொத்தாகும். எனது பிராதில் மேற்சொன்னவாறு சேர்ந்து வாங்கப்பட்ட கிரைய சொத்து என சொல்லவில்லை என்றும் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால்

சரியல்ல, சொல்லியுள்ளேன், கிரைய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்சொன்னவாறு எனது பிராதில் மேற்படி விவரங்களை சொல்லவில்லை என்றும் அதற்கான கிரைய பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.1 அ பதிவேடானது நகல் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் சான்றிட்ட நகல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணமானது வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும் அதன் மூலமாக எந்தவொரு உரிமையும் ஏற்படக்கூடியது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பு ஏற்பட்ட வருவாய் துறை ஆவணங்களோ பத்திரப்பதிவு ஆவணங்களோ இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணமானது எப்பொழுது வருவாய்துறையில் பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது.

3. வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு பெறப்பட்டது என்றால் திருவாடானை சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்டது. எனது தகப்பனார் இறந்த பிறகு தாவா சொத்து சம்மந்தமான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை, எனது சகோதரர்கள் செய்யது, ராவுத்தர், சேக்முகம்மது ஆகியோர்களிடம் இருந்தது. மேற்படி சகோதரர்களிடமிருந்து ஆவணங்களை கேட்டு பார்த்தேனா என்றால் பேச்சு வார்த்தை இல்லாததால் வாங்கி பார்க்கவில்லை. தாவா சொத்து ஆவணங்களை தவிர்த்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பிற சொத்துக்களுக்கான ஆவணங்களை அவர் இறந்தபிறகு பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனது சகோதரர்களுக்கோ அல்லது 8, 9 பிரதிவாதிகளுக்கோ வழக்கறிஞர் அறிவிப்பு தாவா சொத்து தொடர்பாக அனுப்பினேனா என்றால் வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்னர் அனுப்பியுள்ளேன்.

4. நான் எத்தனை வருடங்களாக வெளிநாட்டில் இருந்தேன் என்றால் நான் 25 வருடங்களாக மலேசியா நாட்டில் இருந்தேன், 3, 4 வருடங்களுக்கு ஒருமுறை சொந்த ஊருக்கு வந்து செல்வேன். தாவா சொத்து சம்மந்தமாக எனது சகோதரர் செய்யது மற்றும் ராவுத்தர் ஆகிய இருவரும் வாதிகளாக இருந்து இவ்வழக்கின் 10ம் பிரதிவாதியின் தாத்தா சுப்பிரமணியன் மீது அசல் வழக்கு 15/2012 என தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. மேற்படி வழக்கை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் மேற்படி வழக்கை பற்றி ஒப்புக்கொண்டால் இவ்வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதால் வழக்கை பற்றி தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சுப்பிரமணியனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. மேற்படி வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நான் வெளிநாட்டில் இருப்பதாகவும் எனக்கும் சேர்த்தும் மேற்படி எனது சகோதரர்களால் அவ்வழக்கு செய்யப்பட்டது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சுப்பிரமணியன் இறந்துவிட்டார் என்றால் சரிதான், எப்பொழுது இறந்தார் என்று தெரியாது. 10ம் பிரதிவாதி கற்பகத்தை எதற்காக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் தாவா சொத்தை முகம்மது என்ற அப்துல்காதர் 10ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து தொடர்பாக கிரையம் எழுதி கொடுத்துள்ளார், மேற்படி முகம்மது என்ற அப்துல்காதர் என்ற நபர் எங்கள் ஊரில் இல்லை. மேற்படி விவரங்களை பிராதில் சொல்லி தான் 10ம் பிரதிவாதியை இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் அவ்வாறு தான் சேர்த்துள்ளேன்.

6. எனது பிராதில் தாவா சொத்தினை தாவா சொத்துக்கு சம்மந்தம் இல்லாத 10ம் பிரதிவாதி டிராக்டர் மூலமாக தாவா சொத்தை ஆக்கிரமித்து முழுவதும் உழுக எத்தனம் செய்து வந்துள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அசல்

வழக்கு எண். 15/2012 வழக்கில் பிரதிவாதியாக இருந்த சுப்பிரமணி 10ம் பிரதிவாதிக்கு என்ன உறவுமுறை என்றால் கணவர் ஆவார். 10ம் பிரதிவாதி சுப்பிரமணியின் மனைவி என சொல்வது தவறு என்றும் மேற்படி சுப்பிரமணி 10ம் பிரதிவாதிக்கு தாத்தா முறை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை